தினமலர்

# கல்லூரி விழா



மதுரை கே.எல்.என்.பொறியியல் கல்லூரி ஆண்டு விழாவில் டாடா கெமிக்கல்ஸ் இணை துணை தலைவர் அசோக் முத்துசுவாமி மாணவிக்கு சான்றிதழ் வழங்கினார். அருகில் கல்லூரி செயலாளர் கே.என்.கே. கணேஷ், துணைத்தலைவர் கே.பி.ராதாகிருஷ்ணன்.

**மதுரை, ஏப். 7–**

மதுரை கே.எல்.என். பொறியியல் கல்லூரி ஆண்டு விழா தாளாளர் கே.என்.கே.கணேஷ் தலைமையில் நடந்தது.

துணை தலைவர் ராதா கிருஷ்ணன் முன்னிலை வகித்தார். முதல்வர் ராம் பிரசாத் அறிக்கை வாசித்தார்.

மாணவர்களுக்கு விருதுகளை வழங்கி, டாடா கெமிக்கல்ஸ் குளோபல் டிப்ளாய்மென்ட் இணை துணை தலைவர் அசோக் முத்துசுவாமி பேசுகையில், ''மாணவர்கள் பொருளாதார நிலையை குறித்து கவலையின்றி தங்களின் சுயதிறனை வளர்த்துக் கொண்டு ஆழ்ந்த கல்வி அறிவை பெற்றால் எதிர்காலத்தில் எளிதாக சாதிக்கலாம்,'' என்றார்.

பேராசிரியர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்



# கல்லூரி ஆண்டு விழா

மதுரை, ஏப்.7–

மதுரையை அடுத்த பொட்டிப்பாளையத்தில் உள்ள கே.எல்.என். பொறியியல் கல்லூரியின் '24–வது ஆண்டு விழா நடந்தது. அதில் முக்கிய பிரமுகர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். கல்லூரி' செயலாளர் கணேஷ் வரவேற்றார். கல்லூரி முதல்வர் ராம்பிரசாத் ஆண்டறிக்கை வாசித்தார். இதில் சிறப்பு விருந்தினராக குளோபல் டிப்ளாய்மெண்ட் இயக்குனர் அசோக்முத்துசாமி கலந்து கொண்டார். கல்லூரி துணைத்தலைவர் ராதாகிருஷ்ணன், கல்லூரி செயலாளர் உள்பட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து ஆழ்ந்த கல்வியறிவு குறித்து பேசிய சிறப்பு விருந்தினர், சாதனை படைத்த மாணவர்கள், சிறந்த பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்களுக்கு விருதுகளை வழங்கினார். முடிவில் கணிதவியல் துறை பேராசிரியர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

தமிழ் அஞ்சல்

தமிழ் அஞ்சல் சென்னை, ஞாயிறு, ஏப்ரல், 08,2018

# கே.எல்.என் பொறியியல் கல்லூரி 24வது ஆண்டுவிழா



மதுரை, ஏப்.08-

கே.எல்.என்.பொறியியல் கல்லூரியின் இருபத்துநான்காவதுஆண்டுவிழா நேற்று முன்தினம் 06.04.2018 கல்லூரிஉள் விளையாட்டரங்கில் தொடங்கியது. இதில் விழாபிரமுகர்கள் குத்துவிளக்கேற்றி விழாவைதுவக்கி வைத்தனர். கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளருமானமுனைவர்.கே.என்.கே.கணேஷ் வரவேற்புரை மற்றும் தலைமை உரைநிகழ்த்தினார். அதைத் தொடர்ந்துகல்லூரியின் முதல்வர் முனைவர் ராம்பிரசாத் ஆண்டறிக்கையை வாசித்தார்.

அந்தஆண்டறிக்கையின் சிறப்பம்சமாககல்லூரியின் வளர்ச்சிபற்றியும் துறைவாரியாக மாணவர்களின் சாதனைகள் மற்றும் பேராசிரியர்களின் சாதனைகள் ஆகியவையும் முக்கியஅம்சமாக இருந்தது. விழாவின் சிறப்புவிருந்;தினர் பொறியாளர்.அசோக்முத்துசுவாமி, இணைதுணைத்தலைவர் மற்றும் குளோபல் டிப்ளாய்மெண்ட் இயக்குநர், டாடாகெமிக்கல்ஸ் லிமிடெட் கல்லூரிதுணைத்தலைவர் திரு.கே.பி.ராதாகிருஷ்ணன் அவர்களால் பொன்னாடைபோர்த்தியும்,கல்லூரிசெயலாளர் அவர்களால் பரிசுவழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். இதனைத்தொடர்ந்துசிறப்புவிருந்தினர் அவர்களால் கல்லூரியின் ப்ரமோஸன் வீடியோவெளியிடப்பட்டது. சிறப்புவிருந்தினர் பொறியாளர்அசோக் முத்துசுவாமி ஆண்டுவிழாஉரைநிகழ்த்தினார்.

அவரதுஉரையில் மாணவர்கள் தங்களுடையபொருளாதாரநிலையைப்பற்றியகவலை இல்லாமல் தங்களின் சுயதிறனைவளர்த்துக்கொண்டுஆழ்ந்தகல்வியறிவைப் பெற்றால் எதிர்காலத்தில் எளிதாகசாதிக்கமுடியும் என்று கூறியதுசிறப்பம்சமாக இருந்தது. ஆண்டுவிழாஉரையைத் தொடர்ந்துசிறப்புவிருந்தினர் கல்வியின் சாதனைப்படைத்தமாணவர்களுக்கும் சிறந்தபேராசிரியர்கள் மற்றும் சிறந்தஅலுவலகபணியாளர்களுக்குமானவிருதுகளை வழங்கினார். கணிதவியல் துறைபேராசிரியர் திரு.கே.எஸ்.கே.சுப்ரமணியன் நன்றியுரைஆற்றினார்.

தி இந்து




▲ கே.எல்.என். பொறியியல் கல்லூரி ஆண்டு விழாவில் பங்கேற்றோர்.

# கேஎல்என் பொறியியல் கல்லூரி ஆண்டுவிழா

■ மதுரை

மதுரை அருகே பொட்டபாளையத்தில் அமைந்துள்ள கே.எல். என். பொறியியல் கல்லூரி 24-வது ஆண்டு விழா நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி செயலாளரும், தாளாளருமான கே. என்.கே.கணேஷ் வரவேற்றார். கல்லூரி முதல்வர் அ.வெ. ராம்பிரசாத் ஆண்டறிக்கை வாசித்தார். இந்நிகழ்ச்சியில் குளோபல் டிப்ளாய்மெண்ட் இயக்குநர் அசோக் முத்துசுவாமி, கல்லூரி துணைத் தலைவர் கே.பி. ராதாகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.